DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, PANRUTI.

CC. No.76/2025

Deposition of Witness : Additional witness /PW5

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. பாண்டியன், சிறப்பு உதவி ஆய்வாளர் | Taluk | |
| Father's Name | கிருஷ்ணமூர்த்தி | Village | |
| Age | | Calling | |

(A3 Present , A1, A2 absent U/S.317 PFA)

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 06.08.2026 அன்று குற்றவியல் நடுவர் நீதித்துறை நடுவர் எண்.2, திரு. லூ.மார்ஷல் ஏசுவடியான் B.A, L.L.B(Hons) அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது காடாம்புலியூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். இவ்வழக்கில் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் சங்கர் மற்றும் புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் பிரேம்குமார் அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சியம் என்பதாலும் இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 11.01.2024 அன்று பகல் சுமார் 12.00 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் சங்கர் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஏற்கனவே கடந்த 09.01.2024 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் நிலையத்தில் இருந்தபோது பண்டியபெருமாள் மகன் ஆனந்தகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகார் மனுவைப்பெற்று நிலையம் மனு ரசீது 22/2024 பதிவு செய்து வைத்திருந்ததை பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண்.14/2024, இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 506(2) கீழ் முதல் அறிக்கை பதிவு செய்து அசல் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையும் சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பிரேம்குமார் பார்வைக்கு வைத்துள்ளார். மேற்படி **புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னிட்டு உதவி ஆய்வாளர் பிரேம்குமார் வழக்கு கோப்பினை பார்வையிட்டு தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 11.01.2024அன்று சுமார் 13.00 மணியளவில் சாட்சிகள் தினகரன், சிவஞானம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைவடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. மேலும், வழக்கின் புகார்தாரரும் பாதிகப்பட்ட நபருமான ஆனந்தகிருஷ்ணன் கண்ணுற்ற சாட்சி சந்திரசேகர் என்பவரையும் சாட்சி கோவிந்தராசு என்பவரையும் , கடந்த 11.01.2024 அன்று விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி சாட்சிகளின் விசாரணையிருந்து சம்பவம் உண்மை என தெரியவந்ததில் வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான மணிவண்ணன், ராஜ்மோகன், கார்த்தி (எ) கார்த்திக்ராஜா ஆகியோர்களை தேடியதில் எதிரிகள் அனைவரும் மேன்மைமிகு கடலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமனறத்தில் CMP.568/2024 மனுவில் கடந்த 23.01.2024 அன்று முன்ஜாமீன் பெற்றுயிருந்ததால் உதவி ஆய்வாளர் அவர்களை கைது செய்ய வில்லை.

5. மேற்சொன்ன சிறப்பு உதவி ஆய்வாளர் சங்கரை உதவி ஆய்வாளர் விசாரணை செய்துள்ளார். மேற்படி உதவி ஆய்வாளர் இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து 1, 3 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, கீழும், 2 வது எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(b),323 506(2) கீழும் கடந்த 31.01.2024 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். உதவி ஆய்வாளர் விசாரணையில் அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்கள் அவர்களின் கு.வி.மு.சா.161(3) வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் சொல்லியுள்ளார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதிகொடுத்த பொய்யான புகார் மனுவை பெற்று தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி முறையாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளர் என்றால் சரியல்ல இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவம் இடம் செல்லாமல் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமலும் ஆவணங்கள் அனைத்தையும் காவல் நிலையத்தில் வைத்து ஏற்கனவே தயார் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்

என்றாலும் அதற்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்த இறுதி அறிக்கைக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கின் ஆஜர் எதிரிக்கும் ஆஜர் இல்லா எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down before/by me in open court Readover interpreted to the witness and acknowledged by him to be correct.

Judicial Magistrate No.II,
Panruti.